**OS No.132/2014** உடன் இணைந்த **OS No. 2/2024**
DW 1 – முத்துப்பாண்டி

நாள் 02.04.2026

**பி.வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்று கேட்டால் நான் கிரயம் வாங்கிய சொத்து தகராறு செய்வதாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நீங்கள் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் தாவா சொத்தானது எனக்கு கிரய பாத்தியதத்தின் அடிப்படையில் உரிமையானது என விளம்புகை பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால் சரிதான்.

தாவா வழக்கை 2023 ல் தாக்கல் செய்தேன். வழக்கு சொத்தை 2016 ல் கிரயம் வாங்கினேன். தாவா சொத்தை கிரயம் வாங்குவதற்கு முன்பே தாவா சொத்து சம்பந்தமாக எனக்கு கிரயம் கொடுத்த கருப்புச்சாமி கோனார் என்பவருக்கும், இந்த வழக்கின் ( OS 2 / 2024 ) பிரதிவாதிகளாகிய முனியம்மாள், அர்ஜுனன் என்பவர்களுக்கும் அசல் வழக்கு எண் 100/2014 மற்றும் 132/2014 வழக்கு நடைபெற்று வந்ததா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

மேற்படி இரண்டு வழக்குகளும் நடைபெற்ற விபரம் நன்கு தெரிந்திருந்தும் வீம்பிற்காக சொத்தை வாங்கினீர்கள் என்றால் இல்லை. வில்லங்கம், பட்டா ஆகியவைகளை சரிபார்த்து வாங்கினேன். 2016 ல் வாங்குவதற்கு முன்பே தாவா சொத்தை கருப்புச்சாமிகோனார் அனுபவம் செய்துவந்ததற்கான வரி ரசீது, மற்றும் சாகுபடி அடங்கல் எவையேனும் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை.

1985 ம் ஆண்டிற்கு பின்பு கருப்புச்சாமி கோனார் அனுபவம் செய்த வரி ரசீது மற்றும் சாகுபடி அடங்கல் எதுவும் அவர் பெயரில் இல்லை என்றால் அவர் தான் உழுது அனுபவம் செய்து வந்தார். உழுது அனுபவம் செய்துவந்தற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

கருப்புச்சாமி கோனாருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 3 பெண் பிள்ளைகள். இந்த வழக்கில் மேற்படி 3 பெண் பிள்ளைகளையும்ஆஜர் படுத்த முடியுமா என்றால் மூத்த பெண் பிள்ளையான மீனாட்சி என்பவரை ஆஜர்படுத்த முடியும். மேற்படி மூன்று பெண் பிள்கைள் பெயர் 1 மீனாட்சி, 2 ராஜேஸ்வரி மற்றும் 3

சரஸ்வதி ஆகியோர்கள்.

ராஜேஸ்வரி, சரஸ்வதி ஆகியோர்கள் எங்கிருக்கிறார்கள் என்ற விபரம் எனக்குத் தெரியாது. கடந்த ஒரு வருடமாக ராஜேஸ்வரியும், சரஸ்வதியும் எங்கிருக்கிறார்கள் என்ற விபரம் எனக்குத் தெரியாது.

அவர்களிடம் ஒரு வருடத்திற்கு இடையில் கையொப்பம் வாங்கிவந்தேன் தேதி சரியாக ஞாபகமில்லை. சென்னையில் கையொப்பம் வாங்கிவந்தேன் எந்த முகவரி என்று ஞாபகமில்லை. மூன்று பேரிடமும் கையொப்பம் வாங்கிவந்தேன்.

1 மீனாட்சி, 2 ராஜேஸ்வரி மற்றும் 3 சரஸ்வதி ஆகியோர்களிடம் நான் கையொப்பம் வாங்கி வந்து அவர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள வக்காலத்து மேற்படி மூன்று நபர்களும் கையொப்பம் செய்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

தாவா சொத்தை நான் கிரயம் வாங்கிய கிரயப்பத்திரத்தில் கருப்புச்சாமியின் மகள்களில் ஒரு பெண் சாட்சியாக கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். அன்று அவருக்கு குழந்தை பிறந்திருந்ததால் கையொப்பம் செய்யவில்லை. மற்ற இரண்டு மகள்களும் சாட்சி கையொப்பம் செய்தார்கள்.

வேறு யாரிடமும் கிரயப்பத்திரத்தில் சாட்சி கையொப்பம் வாங்கினீர்களா என்றால் வாங்கவில்லை. கிரயப்பத்திரம் பதிவு செய்த அன்று கருப்புச்சாமி கோனாருக்கு பாத்தியப்பட்டது என்பதை நிரூபிக்கக்கூடிய ஆவணம் ஏதேனும் கொடுத்தாரா என்றால் பட்டா என்னிடம் கொடுத்தார். அந்த பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

தாவா சொத்து கருப்புச்சாமி கோனாருக்கு பாத்தியமானது என்பதை காட்டுவதற்கான வேறு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் பட்டா இருந்தது மட்டும் தான் தெரியும். அவர்களுக்குள் பாகம் ஏற்பட்ட விபரம் எனக்குத் தெரியாது. மூன்று பேருக்கும் தனித்தனியாக சொத்து உள்ளது.

நீங்கள் தாக்கல் செய்துள்ள பிராது, நிரூபண வாக்குமூலத்திலும் தாவா சொத்தை பெரியகருப்பன் இறப்பிற்கு பின்னர் கருப்புச்சாமி அடைந்து அனுபவம் செய்துவந்தார் என்பதற்கான வரி ரசீதை தாக்கல்

செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை.

1985 ம் வருடத்திற்கு பின்பு தாவா சொத்தை கருப்புச்சாமி அனுபவம் செய்துவரவில்லை என்றும் அந்த அடிப்படையில் தான் கருப்புச்சாமி பெயரில் எந்தவிதமான அனுபவரசீது, சாகுபடி அடங்கல் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

தாவா சொத்தை கிரயப்பத்திரம் பதிவு செய்வதற்கு முன்னதாக இருந்தே சுமார் 29 ஆண்டுகாலமாக பிரதிவாதிகள் தான் கருப்புச்சாமி கோனாரிடமிருந்து கிரய அக்ரிமெண்ட் பாத்தியத்தின் மூலம் அடையப்பெற்று அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

ஏற்கனவே தாவா சொத்தை பிரதிவாதிகள் தரப்பிற்கு கிரயம் பேசி கிரயம் கொடுத்துவிட்ட உண்மைநிலை தெரிந்தும், கருப்புச்சாமி கோனாரை ஏமாற்றி அழைத்து சென்று உங்கள் பெயரில் கிரயப்பத்திரம் பதிவு செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

தாவா சொத்தை கருப்புச்சாமி கோனாருக்கு கிரயம் கொடுக்கக்கூடிய காலகட்டத்திலேயே வேறு ஒரு நபருக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்த விபரம் தெரியுமா என்றால் தெரியும் திருவேட்டைகோனாரிடம் ஒத்திக்கு வைக்கப்பட்டிருந்தது.

திருவேட்டை கோனாருக்கு ஒத்தி தொகையை யார் செலுத்தி ஒத்தி மீட்டார்கள் என்றால் அந்த விபரம் எனக்குத் தெரியாது. எத்தனை வருடங்களாக திருவேட்டை கோனார் தாவா சொத்தை ஒத்திக்கு அனுபவம் செய்து வந்தார் என்றால் நீண்ட காலமாக அனுபவம் செய்து வந்தார் எத்தனை வருடங்கள் என்று ஞாபகமில்லை.

திருவேட்டை கோனாருக்கு ஒத்திக்கு வைத்திருந்த ஒத்தி தொகை ரூபாய் 6500/- ஐ பிரதிவாதி முனியம்மாள் கருப்புச்சாமி கோனாருக்காக செலுத்தி ஒத்தி மீட்ட விபரம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

ஏற்கனவே தாவா சொத்து சம்பந்தமாக உங்களுக்கு கிரயம் கொடுத்ததாக சொல்லப்படும் கருப்புச்சாமி கோனாரிடம் தாவா சொத்திற்கான கியர தொகை ரூபாய் 17000/- என முடிவு செய்து 02.06.1985 ம் தேதி கிரய ஒப்பந்த பத்திரம் எழுதப்பட்டு அன்றையதினம் ரூபாய் 10500/- கருப்புச்சாமி வாங்கிக்கொண்டார்

என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. அப்படி ஒன்றும் இல்லை என்று கருப்புச்சாமி சொன்னார். எப்போது சொன்னார் என்றால் கிரயம் வாங்குவதற்கு முன்பு சொன்னார். நான் கிரயம் வாங்குவதற்கு முன்பே கருப்புச்சாமி கோனாருக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே தாவா சொத்து சம்பந்தமாக பிரச்சினை நடந்த விபரமும், காவல் நிலையம் சென்ற விபரம் தெரியுமா என்றால் பணமே வாங்கவில்லை என்று கருப்புச் சாமி சொன்னார். சொத்தை பெண் பிள்ளைகளுக்கு கொடுக்கமாட்டோம் என்று கூறியதால் தான் காவல் நிலையம் சென்றார்கள். நான் கருப்புச்சாமியுடன் காவல் நிலையம் சென்றேன். காவல் நிலையத்தில் நீதிமன்றத்தில் சென்று பார்த்துக்கொள்ளுமாறு அனுப்பிவைத்தார்கள். அதன் பின்பு வழக்கு போட்டார்களா என்ற விபரம் எனக்குத் தெரியாது. சொத்து சம்பந்தமாக இரண்டு வழக்குகள் மானாமதுரை நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் விபரத்தை தாவா சொத்தினை நான் கருப்புச்சாமியிடம் கிரயம் வாங்கும் போது என்னிடம் சொன்னாரா என்றால் அது பற்றி என்னிடம் ஏதும் சொல்லவில்லை. வழக்கு நடைபெறும் விபரத்தை மறைத்து சொத்தை ஏமாற்றி சொத்தை உங்களிடம் கருப்புச்சாமி கொடுத்துவிட்டார் என்றால் சொத்து அவருடையது ஆகும். அவர் ஏமாற்றி சொத்தை என்னிடம் விற்கவில்லை.

பாக்கி தொகை ரூபாய் 6500/- ஐ கருப்புச்சாமிக்காக திருவேட்டை கோனாரிடம் ஒத்தி மீட்புக்காக பிரதிவாதிகள் செலுத்திவைத்தார்கள் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

தாவா சொத்தை நீங்கள் கிரயப்பத்திரம் பதிவு செய்த காலத்திலேயே தாவா சொத்தின் உரிமை, பாத்தியம், அனுபவம் ஆகியவை 2 ம் பிரதிவாதி முனியம்மாள் வசமே இருந்தது என்றாலும், பெயர் அளவில் நான் கிரயம் வாங்கினேன் என்றாலும் சரியல்ல.

கிரயம் பதிவு செய்த காலகட்டத்திலோ அதன் பின்னரோ தாவா சொத்தை சுவாதீனம் பெறவில்லை, அனுபவம் செய்துவரவில்லை என்றால் சரியல்ல.

தாவா சொத்திற்கான அனுபவம் சம்பந்தமான ஆவணங்கள் உங்கள் பெயரிலோ, உங்களுக்கு கிரயம் கொடுத்தாக சொல்லப்படும் கருப்புச்சாமி பெயரிலோ நீண்ட காலமாக இல்லாத நிலையில் நீங்கள் கோரியுள்ள உறுத்துக்கட்டளை பரிகாரம் உங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

1985 ம் ஆண்டு பிரதிவாதிகளுக்கும், கருப்புச்சாமி கோனாருக்கும் ஏற்பட்ட கிரய உடன்படிக்கையின் அடிப்படையில் தாவா சொத்தானது 2 ம் பிரதிவாதிக்கு மட்டுமே பாத்தியமும், அனுபவமும் உள்ள சொத்து என்றால் சரியல்ல.

அசல் வழக்கு எண் 132/2014 வழக்கினை கருப்புச்சாமி கோனாரின் வாரிசுகள் நடத்த முன்வராத நிலையில் நீங்களாக பதிவு செய்துகொண்ட கிரயப்பத்திரத்தின் அடிப்படையில் வீணாக வியாஜ்ஜியம் செய்துவருகிறீர்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**–Sd–**

**Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

**–Sd–**
**District Munsif,**
**Manamadurai.**